**முன்னேற்றமடைந்துவரும் பிராந்தியங்களில் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தியினை ஏற்படுத்தல் செயற்திட்டம் - 2018**

---

முன்னேற்றமடைந்துவரும் பிராந்தியங்களில் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தியினை ஏற்படுத்தல் செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஜப்பான் சர்வதேச கூட்டுத்தாபன முகவர்க்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 யூலை 07 ஆந் திகதிய எஸ்எல்-பி116 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இந்த அறிக்கை செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுல்படுத்தும் முகவர்களின் பரிசீலனைக்காக சமர்ப்பிக்கப்பட்ட மற்றும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட விடயங்களைக் கொண்டுள்ளது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னால் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சும் தற்போதைய உள்ளக மற்றும் உள்நாட்டு விவகார மற்றும் மாகாண மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராகக் காணப்படுகின்றதுடன் 04 மாகாணங்களின் மாகாண சபைகள் செயற்திட்டத்தின் அமுல்படுத்தல் முகவர்களாகக் காணப்படுகின்றன. பின்தொடர்ந்துவரும் கடன் உடன்படிக்கையின் கீழ் செயற்திட்டத்தின் அடிப்படை உட்கட்டமைப்பை முன்னேற்றுவதனூடாக மக்களின் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்வது மற்றும் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவது செயற்திட்டத்தின் நோக்கங்களாகக் காணப்படுகின்றன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 20,622 மில்லியனுக்குச் சமமான ஜப்பான் யென் 15,410 மில்லியனாகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 17,185 மில்லியனுக்குச் சமமான ஜப்பான் யென் 12,957 மில்லியன் ஜப்பான் சர்வதேச கூட்டுத்தாபன முகவரினால் நிதியளிக்கப்படவேண்டுமென இணக்கப்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2017 யூலை 07 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியல்படுத்தப்பட்டது.

## 1.3 அபிப்பிராயம்

2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினை மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இற்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்கனுக்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களால் ஏற்கப்படும்.

**1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு செயற்திட்டத்தின் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டது.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயலாற்றல்

செயற்திட்ட ஞாபன அமுல்படுத்தல் பட்டியலின் பிரகாரம், வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் கிராமிய வீதிகளின் நிர்மாணம் மற்றும் புனரமைப்புக்காக 224 உப செயற்திட்டங்கள், நீர்ப்பாசன முறைமைகளின் நிர்மாணம் மற்றும் புனரமைப்புக்காக 221 உப செயற்திட்டங்கள் மற்றும் நீர் விநியோக திட்டங்களுக்காக 73 உப செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் போதும ஆரம்பிக்கப்பட வேண்டுமென பட்டியல்படுத்தப்பட்டன. எவ்வாறாயினும், ஆலோசனையாளர்களினை நியமிப்பதில் தாமதங்கள் காரணமாக 2018 திசெம்பர் 31 வரையிலும் தொடர்புடைய வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 மனித வளங்கள் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய விடயங்கள்

| | கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| அ. | 2017 செப்தெம்பர் 08 இல் சிரே'ட பொறியியலாளர், பெறுகை நிபுணர் பதவிகளினை முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அங்கீகரித்திருந்த போதிலும், தொடர்புடைய பதவிகள் மீளாய்வாண்டின் போது தொடர்ந்தும் வெற்றிடமாகக் காணப்பட்டன. | செயற்திட்டத்தின் நடவடிக்கைகளினை அமுல்படுத்துவதில் தாமதங்கள் | இந்தப் பதவிக்காக தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் வேலைக்கு அறிக்கையிட்டிருக்கவில்லை. வெற்றிடமாகக் காணப்படும் இந்தப் பதவியின் தொழிற்பாடு தாமதமின்றி செயற்திட்ட பணிப்பாளர் மற்றும் பிரதி செயற்திட்ட பணிப்பாளரினால் மேற்கொள்ளப்படுகின்றன. | செயன்முறையினை வினைத்திறனாக மற்றும் விவேகமான முறையில் அமுல்படுத்த பெறுகை விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் ஒருவர் காணப்பட வேண்டும். |
| ஆ | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 1/2006 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம், செயற்திட்ட பணிப்பாளரினால் செயற்திட்ட ஊழியர்களின் கடமைப்பகிர்வு முறையாக மேற்கொள்ளப்படாமையினால், ஆண்டின் போது ஊழியர் செயலாற்றல் தொடர்பான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இலக்குகளினை அடைந்து கொள்வதற்கான ஊழியர்களின் பங்களிப்பை அளவிட முடியவில்லை. | கணக்காய்வு சுட்டிக் காட்டிய பின்னர், உத்தியோகத்தர்களுக்கு கடமைப் பட்டியல் வழங்கப்பட்டிருக்கின்றது. | அடைவுகளினை அளவிட உத்தியோகத்தர்களின் செயலாற்றலினை மதிப்பிட எடுக்கப்படல் வேண்டும். |

## 2.3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| 2016 மார்ச் 24 இன் 1/2006 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் பிரகாரம், செயற்திட்ட வழிகாட்டல் குழுவின் கூட்டம் 02 மாதங்களுக் கொரு தடவை நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது 02 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப் பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் நடவடிக்கைகளினை கண்காணிப்பது தொடர்பில் பொறிமுறையொன்று முறையாக அமுல்படுத்தப்பட வில்லை. | செயற்திட்டம் முழுமையாக அமுல்படுத்தப் பட்டிருக்கவில்லை. ஆகையினால், குறைந்த எண்ணிக்கையான கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தது | செயற்திட்டத்தின் நடவடிக்கைகளினை மீளாய்வு செய்யக்கூடியவாறு செயற்திட்டத்தின் வழிகாட்டல் குழுக் கூட்டங்கள் தொடர்ச்சியாக நடாத்தப்பட வேண்டுமென வேண்டப்படுகின்றது |